RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# திருக்குறளில் பெண்ணியப் பண்பாட்டு அடையாளங்கள்

**செ. ஐஸ்வர்ய சுகிலா [அ] ***

[அ] தமிழாய்வு மையம், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்-629003, இந்தியா

# Feminist Cultural Perspectives in the Tirukkural

**S. Aiswariya Sukhila [a, *]**

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), Nagercoil-629003, India

*Corresponding Author:
slaiswariya@gmail.com

**ABSTRACT**

Tirukkural is a timeless classic of Tamil literature that integrates the principles of virtue (Aram), wealth (Porul), and love (Inbam) into a comprehensive philosophy of human life. Within its ethical framework, the work presents significant reflections on the status, role, and cultural identity of women. This study seeks to examine how feminist cultural identities are constructed and represented in the Tirukkural, with particular emphasis on the concepts of chastity, family responsibility, emotional sensitivity, social dignity, and women's moral influence. In the Book of Virtue (Arathuppal), Thiruvalluvar extols the virtues of the ideal wife, emphasizing her chastity and her indispensable role in preserving the stability and harmony of the family. He portrays women as the moral pillars of the household and as essential contributors to social cohesion. In the Book of Love (Kamathuppal), the emotional world of women is depicted with remarkable sensitivity, revealing their unique inner consciousness, psychological depth, and capacity for expressing love and longing. These portrayals present women not merely as passive or submissive figures but as individuals possessing emotional agency and personal identity. From the perspective of contemporary feminist criticism, the Tirukkural suggests that women should be understood not only within the constraints of traditional social structures but also as active participants in shaping cultural values and moral order. This study therefore argues for a renewed feminist interpretation of the Tirukkural, demonstrating how the text recognizes women's role as cultural agents and ethical contributors within Tamil society.

**Keywords:** Tirukkural, Tamil society, Cultural identities, Feminist, Criticism

## முன்னுரை

பழந்தமிழர்களின் இயற்கை சார்ந்த நில அடிப்படையிலான சங்ககாலம், தலைவனும் தலைவியுமாக வேறுபாடு இன்றி இணைந்து வாழ்ந்ததையே முன்வைக்கிறது. சங்கம் மருவிய காலம் இதிலிருந்து வேறுபட்டு அறத்தையே முழுமையாக வலியுறுத்தியது. அறநூல்கள் ஆணுக்கான அறத்தை வலியுறுத்தி பெண்ணை ஆணுக்குத் துணைபோகக் கூடியவர். தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவள் எனவும் போதிக்கின்றன. அறநூல்களில் முதன்மையான திருக்குறளை பால்பேதமற்ற நூல் என்றே குறிப்பிடலாம். ஆயினும் காலபின்புலத்தின் அடிப்படையில் ஆணின் பார்வையில் கட்டமைக்கப்பட்டுள்ள பெண்ணையே திருக்குறள் முன்னிறுத்துகிறது. பெண்ணியவாதிகள் திருக்குறளை கடுமையாக விமர்சனம் செய்யும் இச்சூழலில் திருக்குறள் காட்டும் பெண்களை இனங்காண்பது காலத்தின் தேவையாகிறது.

## மென்மையாக பார்க்கப்படும் பெண்

மலர்களில் மிக மென்மையான தன்மை கொண்டது அனிச்சமலர்கள். அத்தகைய அனிச்சமலர்களைவிட மென்மையானவள் பெண் என்கிறது திருக்குறள். மூங்கில் போலத் திரண்ட

தோளினையுடைய பெண்ணின் மேனி இளந்தளிர்நிறம். முறுவலிக்கும் புன்னகையோ முத்துக்கள். உடல் நறுமணம், மைதீட்டிய கண்களோ வேல்கள். குவளை மலர்கள் இவள் கண்களைக் கண்டு நாணுகின்றன. மதி ஏது மடந்தை முகம் ஏது என தெரியாமல் விண்மீன்கள் கலங்குகின்றன. அனிச்ச மலரும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் என மென்மையை வள்ளுவர் திருக்குறளில் முன்வைக்கிறார்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்

மென்னீரள் யாம்வீழ் பவள் (1111)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்

பலர்காணும் பூவொக்கும் என்று (1112)

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்

வேல்உண்கண் வேயத்தோ ளவட்கு (1113)

அனிச்சப் பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை (1115)

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்

மாண்இழை கண்ஒவ்வேம் என்று (1114)

மதியும் மடந்தை முகனும் அறியா

பதியின் கலங்கிய மீன் (1116)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம்" (1120)

பெண்ணின் அழகையும், மலரைப்போன்ற மென்மையையும் விதந்து ஆணின் குரலில் ஒலிக்கும் பாடல்களாக இவை அமைகின்றன. அனிச்ச மலர், குவளை மலர், மதி இவைகள் பெண்ணின் மென்மை கலந்த அழகுக்கு உவமையாகிறது. இவ்வாறாக திருக்குறளில் ஆணின் பார்வையில் பெண்ணின் மென்மையான அழகு உயர்வு நவிற்சியாக பார்க்கப்படுகிறது.

## கற்பென்னும் திண்மையுடைய பெண்

கற்பென்னும் திண்மையை பெண்ணின் பெருமைமிகு குணமாக வள்ளுவர் வலியுறுத்துகிறார். கற்பு என்பது மனஉறுதி. மனதில் சலனமின்மை, அவ்வுறுதி வாய்க்கப் பெற்றால் பெண் பெருமையுடையவளாகத் திகழ்வாள். கற்புடைய மகளிர் தெய்வத்தைத் தொழவில்லை என்றாலும் கணவனைத் தொழுது ஒழுகுவாள். அவ்வாறு தொழுது ஒழுகும் குணம் கொண்டவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என பெண்ணின் கற்பு உயர்வாகவும் எல்லா வளங்களுக்கு அடிப்படையாகவும் பார்க்கப்படுவதை உணரலாம். பெண் கற்புடையவளாக இருக்க அவளால் மட்டுமே இயலும். வேறு யாராலும் அவளை காத்துக் கொள்ள இயலாது என வள்ளுவர் கூறுகிறார்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின் (54)

தெய்வம் தொழஅள் கொழுநற் றொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை (55)

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை (57)

வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் பெண்ணின் கற்பு மிக உயர்வாகச் சுட்டப்படுவதோடு, ஒழுக்கநெறி வலியுறுத்தப்படுவதையும் இனங்காண முடிகிறது.

## மனைத்தக்க மாண்புடைய பெண்

மனைக்கு ஏற்ற மாண்புடையவளாக பெண் இருப்பதோடு கணவனின் வருவாய் அறிந்து அதற்கு ஏற்ப நடப்பவளாகவும் இருக்க வேண்டும். இல்லத்திற்கு ஏற்ற குணங்கள் இல்லாத பெண்ணால் எந்த

மாட்சிமையும் இருப்பதில்லை. பிற செல்வங்கள் எத்தகைய சிறப்புகளைத் தந்தாலும் அதனால் எந்த பயனையும் அடைய இயலாது. மனைவி மாட்சியமையுடையவளானால் வேறெதுவும் இல்லையென்றாலும் இல்லாதது போல் தோன்றாது. அவளிடம் மாட்சிமை இல்லையேல் பிற எல்லாமிருந்தாலும் உள்ளது போல் இராது. வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் மனைவியின் மாட்சிமையை மிக வலியுறுத்துகிறார். மனைக்குரிய மாட்சி பெண்ணிடம் உள்ளதையும், அம்மாட்சிமை இழந்த பெண்களையுடைய குடும்பம் எல்லாம் இருந்தும் இல்லாததாய் எண்ணப்படுவதையும் காணலாம்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித் தாயினும் இல் (52)

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை" (53)

நற்பண்புகள் நிறைந்த மனைவி அமைந்தால் அந்த குடும்பம் வளமாக வாழும். மனைவியின் குணநலன்களே குடும்பத்தின் உயர்வையும் தாழ்வையும் தீர்மானிக்கிறது. இவ்வாறாக குடும்பமாக கூடி வாழும் மனிதகுலத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைவது பெண்தான் என்பதையும் திருவள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

## மகனை சான்றோன் எனக் கேட்டு மகிழும் பெண்

அறிவறிந்த மக்களைப் பெறுவதே சிறந்த பேறு. பண்புடைய மக்களைப் குழந்தைகளாகக் கிடைப்பவர்களுக்கு ஏழுபிறப்பும் தீயவை தீண்டாது. தம்முடைய மக்கள் தமக்குச் செல்வம் என்றாலும் நற்செய்கைகள் அமைந்தவர்களை மக்களாகப் பெற்றவர்கள் தங்களின் வினைப்பயனாலே அதை அடைவர் என்பதைச் பொதுவாக சொல்லும் வள்ளுவர் தந்தையின் கடமையை முன்வைக்கிறார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்" (67)

தந்தை தனது மகனுக்கு செய்யும் மிகச்சிறந்த உதவியென்பது அவனை அறிஞர்கள் சபையில் முதன்மையாக இருக்க வைக்கும் கல்வியறிவைப் புகட்டுவதாகும் என்கிறார் வள்ளுவர். அதைப்போன்று தாய் தன் மகனைக்குறித்து மிக்க மகிழ்ச்சியடையும் தருணத்தையும் குறிப்பிடுகிறார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

தாயானவள் தன் குழந்தையை பெற்றெடுத்த நேரத்தைவிட அந்த மகன் அறிவு மற்றும் ஒழுக்கத்தால் சிறந்து அறிவாளி எனப் பிறர் சொல்லக் கேட்கும்போதே அதிக மகிழ்ச்சி அடைவாள் என்பதைக் கூறுகிறது.

குழந்தைகளின் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிதாக இருக்கிறது. மக்களின் மெய்தீண்டல் உடற்கின்பம் தருவதாகவும் அவர் சொற்கேட்டல் செவிக்கு இன்பத்தையும் தருகிறது. தனது மக்கள் மழலைச் சொல் கேளாதவர் குழல் இனிது யாழ் இனிது என்று சொல்வர். தனது மகனைச் சான்றோன் எனக் கேட்பதையே விரும்பும் பெண்ணாகவும் அதே நேரம் அவனைச் சான்றோனாக அவையில் முந்தியிருக்கச் செய்பவனாக ஆணையும் அடையாளம் காட்டுகின்றார். தனக்கு இன்பம் தரும் குழந்தையை மக்கள் என்னும் பொதுப்பெயரில் முன்வைப்பதிலிருந்து பெண்ணை, மகள் என தனித்து வலியுறுத்தவில்லை என்பதையும் உணர முடிகிறது.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு 60)

"நன்மக்கள் என்பதுள் பெண் குழந்தைகளும் அடங்குவர்" என மோகனராசு குறிப்பிடுகின்றார் (மோகனராசு ப., 11) தன் மகனைச் சான்றோன் என முன்வைத்ததைப் போல் பெண் குழந்தையைத் தனியாக முன்வைக்காததை திருக்குறளில் இனங்காண முடிகிறது.

## ஆண் மையப் பெண்கள்

வள்ளுவர் காமத்துப்பாலில் காமம் மிகுந்த பெண்ணை மட்டுமே சொல்லும் நிலையில் பொருட்பாலில் 'பெண்வழிச்சேறல்' என்னும் அதிகாரத்தில் அவளுடனான உறவை ஆண் அளவோடுதான் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறார். 'வள்ளுவர் காலத்தில் மகளிர் இல்லப்பணியோடு இருந்தனர். ஆண்கள் பொருளீட்டல், ஆட்சி முதலிய பணிகளைச் செய்தனர். அப்பணியில் இருக்கும் ஆண்கள் மனைவியிடம் கொண்ட காமம் முதலிய காரணங்களால் நெறிபிறழ்ந்து சமூகத்திற்கு தீங்கு செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தவே 'பெண்வழிச்சேறல்' அதிகாரம் பொருட்பாலில் அமைக்கப்பட்டுள்ளது" என்று இரத்தினம் குறிப்பிடுகின்றார் (இரத்தினம்.ஆ.,ப.259) பால் பேதமற்று இருபாலரும் சமம் என எனக்கூறும் இக்காலத்தில் இக்கருத்து பொருந்தாத அமைகிறது.

இன்பவயப்பட்டு காமத்தோடு வாழ்பவர்கள் மாட்சிமைப்பட்ட பயனை அடையமாட்டார்கள். காரியம் ஆற்றுதலை விரும்புகிறவர்கள் காமத்தைப் புறக்கணிப்பர். தன்னைப் பேணி காக்காமல் பெண்ணின்பம் எனப்படும் காமத்தில் உழல்பவனது செல்வம் அழிந்து அவனுக்கு அவமானத்தைத் தரும். காமம் காரணமாக மனைவியிடம் தாழ்ந்து நடக்கின்ற தன்மை நல்லவர் நடுவில் நாணி வெட்கப்படும்படி செய்யும். காம இன்பத்தில் இல்லாளோடு திளைத்து வாழ்பவன் பெருமையில்லாதவனாகி விடுவான். "பெண்ணின் அறிவுத் திறனையும் ஆற்றலையும் மறுக்கும் போக்கை திருக்குறளில் காணமுடிகிறது. திருவள்ளுவரின் குறளில் ஆண் மையவாதம் அழுத்தமாக பொதிந்துள்ளது" என்ற கருத்தை முருகேசபாண்டியன் முன்வைக்கிறார். ((முருகேசபாண்டியன, ப16) காரியம் ஆற்றும் சிந்தனையுடன் மனவுறுதி உடையவர்களிடம் பெண்ணுக்கு அடிமையாகும் பெண்பித்து எக்காலத்தும் உண்டாகாது.

"இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்

நல்லாருள் நாணுத் தரும் (903)

எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்

பெண்சேர்ந்தாம் பேதமை இல்"(910)

பெண் காமத்தில் ஆணுக்காக ஏங்கி வருந்துபவளாகவும் ஆண் காரியத்திற்காக (வினை) அவளை சேராமல் அளவோடு இருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படையாக வள்ளுவர் முன் வைக்கிறார். இதனால் ஆண் எனும் மையப்புள்ளியைச் சுற்றி சுழல்பவளாகப் பெண் இருக்கவேண்டும் எனப்படுவதும் புலனாகிறது.

## வரைவின் மகளிர்

வள்ளுவர் வரைவின் மகளிர் என பொருட்பாலில் ஒரு தனி அதிகாரத்தை முன்வைக்கிறார். அன்பில் ஆசையில்லாமல் பொருளில் ஆசை வைக்கும் அழகிய தொடியணிந்த பெண்களின் இனிய பேச்சு முதலில் இனிதாக இருப்பினும் இறுதியில் இழிவைத் தரும். பொருளின் பயனையே அளந்து அறிந்து பண்புடையவர்போல் பேசும் பண்பற்ற மகளிரின் இன்பம் தீதாகிவிடும். கொடுக்கும் பொருளை விரும்பும் பெண்களைத் தழுவுதல் இருட்டறையில் பிணத்தை கூலிக்குத் தழுவும் தன்மையுடையது. மதியும் மாட்சிமைப்பட்ட கல்வியும் உடையவர் பொதுமகளிரின் அழகினை தீண்டமாட்டார்கள். அழகுபடுத்திக்காட்டி அழகை பரப்பி விற்கும் பெண்ணினது தோள்களை உடல்நலத்தை காக்க விரும்புபவர்கள் தீண்டமாட்டார்கள். ஏமாற்றக் கூடிய மாயமகளிரை தழுவிக் கொள்ளுதல் வஞ்சனையை அறியாதவர்க்கு அவள் மயக்கும் அணங்காகி விடுவாள்.

"ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப

மாய மகளிர் முயக்கு"

ஒருவனைக் கூடும்போது அடுத்தவனை நினைக்கும் இருமனப் பெண்டிரையும் வள்ளுவர் கூடாதவராக முன்வைக்கிறார். அன்பை விரும்பாமல் பொருளை மட்டுமே கருதி, திருமணம் செய்யாமல் கட்டுபாடின்றி வாழும். இதுபோன்ற, மகளிரின் பொய்யான சேர்க்கையை அறிவுடையோர் விரும்பமாட்டார்கள் என வள்ளுவர் எச்சரிக்கிறார்.

## பெண்ணுக்கான வெளி

அறத்துப்பாலில் வாழ்க்கை துணைநலம் என்னும் ஒரு அதிகாரத்தில் பெண்ணின் சிறப்புகளை முன்வைத்த வள்ளுவர் பொருட்பாலில் இரு அதிகாரங்களில் கூடாத பெண்களாக முன்வைக்கிறார். ஆணின் வினைத்திட்டம் அழியும் எனவும், பொருட்பெண்டிர் எனவும், காமத்துப் பாலில் 24

அதிகாரங்களில் பெண்ணின் மயக்கும் அழகைத் தொடங்கி ஊடல் காமத்துக்கு இன்பமாக அமைவதையும் முன்வைக்கிறார். மயக்கும் அழகு, நோக்கு, நோய்க்கு மருந்து, மலரினும் மென்மை, பணிமொழியாள், காமமிகுதியால் நாணத்தைத் துறத்தல், மடலேறுதல், பிரிவு, நினைத்து புலம்பல், கனவு உரைத்தல், பொழுதுகண்டு இரங்கல், உறுப்புநலன் அழிதல், நெஞ்சொடு கிளத்தல், புணர்ச்சி விதும்பல், புலவி, உடலுவகை என காமத்துப் பால் முழுக்க பெண்ணை ஆணுக்கான இன்பம் தருபவளாக அதற்கு உருகுபவளாக மெலிபவளாக, புலம்புகிறவளாக, இரங்குகிறவளாக, நலன் அழிபவளாக, விதும்புகிறவளாக குறிப்பிடுகிறார். இதையே முருகேசப்பாண்டியனும் முன்வைக்கிறார். “பாலியல் அறமானது முழுக்க பெண்ணை நோக்கியே வள்ளுவரால் முன்மொழியப்பட்டுள்ளது. தனிமனித ஒழுக்கம் என்ற லட்சிய நோக்கிலான அறமும் பெண் குறித்த ஆண் மேலாதிக்க தன்மையுடன் அமைந்துள்ளது. வள்ளுவர் சித்தரிக்கும் ஆணின் ஒவ்வொரு அசைவும் செயலும் பெண்ணின் மீதான அவனது அதிகாரத்தை சுற்றியே இருக்கிறது.” (முருகேசபாண்டியன், ப.25) என்கிறார்.

இல்வாழ்க்கை மக்கட்பேறு, விருந்தோம்பல், போன்றவை வள்ளுவர் முன்வைத்தாலும் அதில் ஒரு பாடலைக் கூட பெண்ணுக்கானதாக முன்வைக்கவில்லை. பொதுவான பாடல்களாக முன்வைப்பதை வள்ளுவனிடம் காணமுடிகிறது. பொதுவானதாக முன்வைக்கப்படும் பாடல்கள் எல்லாம் ஆணை மறைமுகமாக மையப்படுத்துவதாகவே உள்ளன. எனவே திருக்குறளில் காணப்படும் பெண்கள் பெரும்பாலும் ஆணை மையமாகக் கொண்டு ஆணுக்கான இன்ப நிலைக்கானவளாக மட்டுமே காட்டப்பட்டுள்ளாள். கல்விக்கு உவமைக் கூறும்போதும் பெண்ணின் மார்பு சுட்டப்படுகிறது.

“குல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்

இல்லாதாள் பெண்காமுற் றற்று” (402)

பெண் நிலத்திற்கு உவமையாக்கப்படுகிறாள் (1039). ஆணிடம் மயங்குகின்ற சாயலைக் கொண்டவளாக சித்தரிக்கப்படுகிறாள். பெண் அறிவுரைக் கூற தகுதியற்றவளாய், அதே நிலையில் ஆணின் பிரிவுக்காக ஏங்கித் தவிப்பவளாய் இருப்பதை பல குறள்களில் காணமுடிகிறது. பெண்ணின் வாழ்வு கணவன், சுற்றத்தார், விருந்தோம்பல், நன்மக்கள் பேறு என புறவெளியில் இருந்து ஒதுக்கப்பட்டு இல்லம் சார்ந்த அகவெளியில் கற்பு என்ற ஒன்றை முன்னிறுத்தி கணவனைப் பேணுபவளாக சோர்வில்லாதவளாக முன்வைக்கப்படுகிறாள். பெண்ணுக்கான அறங்கள் கற்புநெறித் தவறாத இல்வாழ்க்கை சார்ந்ததாகவே முன்வைக்கப்படும்போது ஆணுக்கான அறங்கள் புறவெளி சார்ந்ததாய் சான்றோனாக இனங்காணப்படுகிறது. பெண் ஆணுக்கான அறத்திற்கு துணைநிற்பவளாய் காட்டப்பட்டுள்ளாள். பெண்ணுக்கான அறங்கள் ஆணுக்கானதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

திருக்குறள் பால்பேதமற்ற நூல் என்றாலும் பெண்ணுக்கான அறங்களை ஆணுக்கான அறங்களை போல் தனியாக முன்னிறுத்துகிறது. பெண்ணின் பேச்சைக் கேட்டு நடத்தல், பெண்ணின் வேண்டுதலை நிறைவேற்றுதல், பெண்ணுக்கு பணிந்து நடத்தல் ஆகிய செயல்களை செய்யும் ஆண்களை வள்ளுவர் கடுமையாகச் சாடுகிறார். பெண்ணிடம் தன் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் ஆணால் அறச்செயல்களை செய்ய இயலாது என வலியுறுத்தும் வள்ளுவர் மகளிரின் நிறைகாக்கும் கற்பினைப் பெண்ணுக்கான அறமாக முன்வைக்கிறார். கற்பெனும் திண்மையுண்டாகப் பெறின் பெண் உடலை பிற ஆண்களிடமிருந்து காத்து புனித உடலாக்கி ஆணின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் பெண் மனதை தனக்காக ஏங்குவதாய் இனங்காணும் கற்பு பிரிவில் கூட இன்னும் ஆழமாக வலியுறுத்தப்படுகிறது. வள்ளுவர் ‘கற்பை’ பெண்ணுக்கான அறமாக முன்வைக்கிறார். பெண் உடலை போகப் பொருளாக துய்ப்பிற்கு உரியதாக வள்ளுவர் ஆணுக்கான அறமாக இனங்காணுகிறார். காதலி மனைவி என்ற அடையாளங்களுடன் பாலியல் கொண்டாட்டத்தினை முன்வைக்கும் காமத்துப்பால் பெண் தனது உடலை ஆணிடம் ஒப்படைத்துவிட்டு ஏங்கித் தவிப்பதாக புனையப்பட்டுள்ளது. வள்ளுவர் உருவாக்கிய பெண் ஆணிலிருந்து தனித்து ஆணுக்காக வாழ்பவளாகவே உள்ளாள். வள்ளுவர் கூறும் பொது அறங்கள் பெண்ணுககு பொருந்துவனவாக இல்லாமல் ஆணுக்கானவைகளாகவே உள்ளன. இன்று பெண்கள் பொது வெளியில் இயங்கத் தொடங்கி உள்ளதால் பொது அறங்கள் பெண்ணுக்கு பொருந்துவதாக இருந்தாலும், வள்ளுவர் கூறும் பெண் பற்றிய அறங்கள் மறுவாசிப்பிற்கு உள்ளாக்க வேண்டியது காலத் தேவையாகிறது. பெண்ணுக்கான அறங்கள் ஆண் மையத்தை உடைத்து விட்டு பொதுவானதாக மாற வேண்டும்.

## References

ஆ. இரத்தினம், இதுதான் வள்ளுவம் - திருக்குறள் ஆய்வு-3, கலைக்கோ வெளியீடு, சென்னை

முருகேசபாண்டியன், (2008) திருக்குறள் உலகப் பொதுமறையா? சில சொல்லாடல்கள், தீராநதி

மோகனராசு, திருவள்ளுவர் கண்ட புதுமைப் பெண், பகுதி-2, மணிவாசகர் பதிப்பகம், சென்னை

மு.வரதராசன், திருக்குறள் தெளிவுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License